Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

STC 2979/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution DW 1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | தமிழ் மணி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 21.12.2023

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர் கற்பகவுண்டபுதுாரில் குடியிருந்து பைனான்ஸ் பாட்னாராக இருந்தேன். தற்போது நான் வீட்டில் உள்ளேன். சுப்பிரமணி என்னுடைய பைனான்ஸ் பாட்னர். அவர் என்மீது சிசி 48/17 , சிசி 51/17 , சிசி 52/17 ஆகிய தனிப்பட்ட வழக்குளை கரூர் விரைவு நீதிமன்றத்தில் சுப்பிரமணி தாக்கல் செய்துள்ளார். இது இல்லாமல் தனியாக சிசி

S/D K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

723/17 என்ற வழக்கை பாரத் கேப்பிடல் பைனான்ஸ் மூலமாக என்மீது தாக்கல் செய்துளளார். பாரத் கேப்பிடலில் நான் பங்கு தாரராக இருந்தேன். சிசி 723/17 என்ற வழக்கிற்காக 12.07.2019 ம் தேதி சுப்பிரமணி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். பாரத் கேப்பிடல் பைனான்ஸ்ல் என்னுடன் சேர்த்து மொத்தம் 7 பேர் பங்குதாரராக இருந்தோம். சுப்பிரமணி நிர்வாக பங்குதாரராக இருந்தார். பாரத் கேப்பிடல் 2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

2.அதற்கு ஒவ்வொரு பங்குதாரரிடம் இருந்தும் 4 லட்சம் முதலீடு மற்றும் 6 லட்சம் ரூபாய் டெப்பாசிடாக பெறப்பட்டது. என்னுடைய பங்கு தொகை 4 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் உள்ளது என சுப்பிரமணி தன்னுடைய சிசி 723/17 குறுக்கு விசாரணையில் ஒப்புகொண்டுள்ளார். அந்த பார்த் கேப்பிடலின் லெட்ஜர் அக்கவுண்ட் **எ.சா. ஆ. 1 ஆக தாக்கல் செய்கிறேன்.** அதே பாரத் கேப்பிடலில் சுப்பிரமணி பதிவு செய்யாத ஏல சீட்டு நடத்தினார். அதில் நானும் சீட்டுபோட்டிருந்தேன் எனது நண்பர்கள் 4 பேரும் சீட்டுபோட்டிருந்தார்கள். மேற்படி சங்கதிகளை சுப்பிரமணி சிசி 723/17 குறுக்கு விசாரணையில் ஒப்பு கொண்டள்ளார்.

3.அதற்காக சுப்பிரமணி எழுதிகொடுத்த ரசீது 5 எண்ணிக்கை **எ.சா. ஆ 2 ஆக தாக்கல் செய்யகிறேன். 2015 ல்** சுப்பிரமணி செய்த வரவு செலவு சரியில்லாததால் சுப்பிரமணியிடம் வேகமாக அதை நான் கேட்டேன் உடனே அவர் பைனான்சில் இருந்து விலகி கொள் என்று சொல்லிவிட்டார். மறுநாள் சுப்பிரமணி கூட்டு விலகல் பத்திரம் அடித்துகொண்டு வந்து கொடுத்தார் அதில் நானும், நல்லுசாமி கையெழுத்து போட்டோம். கையெழுத்து போடுவதற்கு முன்பாக எனக்கு வரவேண்டிய 7 லட்சம் ரூபாயை நான் கேட்டேன். அவர் அதை எல்லாம் தான் வசூல் செய்து கொடுப்பதாக என்னிடம் சொன்னார். அதற்காக சுப்பிரமணி எழுதிகொடுதத சீட்டு **எ.சா.ஆ 3 .**

**4.** மேற்படி சங்கதிகள் அனைத்தும் சிசி 723/17 குறுக்கு விசாரணையில் சுப்பிரமணி ஒப்புகொண்டுள்ளார். சிசி 723/17 ல் சுப்பிரமணியின் சாட்சி, பிரமாண வாக்குமூலம், குறுக்குவிசாரணை **எ.சா.ஆ 4.** புகார்தாரர் தரப்பில் எ.சா. 1 முதல் 4 வரையிலான ஆவணங்களுக்கு ஆட்சபனையுடன் குறியீடு செய்யப்பட்டது. சுப்பிரமணியிடம் நான் சீட்டு போட்ட வகையில் எனக்கு 7 லட்சம் ரூபாய் அவர் கொடுக்க வேண்டியுள்ளது. பைனான்ஸ்ல், பதிவு செய்யப்படாத சீட்டு எடுக்கும்போது, எழுதப்படாத காசோலைகளும், புரோ நோட்டுகளும், வாங்கப்படுவது வழக்கம்.

S/D K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

அதற்காக எனது நண்பர்கள் 4 பேர் எடுத்த சீட்டுக்காக ஜாமீன்காக நான் புரோநோட்டுகளும், காசோலைகளும் கொடுத்திருந்தேன். அந்த காசோலையை வைத்து சுப்பிரமணி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். சிசி 723/17 வழக்கில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி போடப்பட்டிருநதபோதும், சுப்பிரமணி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. சிசி 48/17, சிசி 51/17, 51/17 மூன்று வழக்கும் சேர்ந்துதான் சுப்பிரமணி சாட்சி சொன்னார். அதன் பின்பு சுப்பிரமணி இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் சேர்க்கப்பட்டு வழக்கு நடத்தப்படுகிறது. சுப்பிரமணியிடம் நான் எந்த கடனும் வாங்கவில்லை அவர் தான் எனக்கு பணம் தரவேண்டியுள்ளது. அதனால் புகாரை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.